Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 492/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| **Name** | :: | **ஆனந்தராஜ்** |
| Father's Name | :: | **அன்பழகன்** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**08.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை புளியம்பட்டி பஜனை மடத்தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 21.05.2025 ம் தேதி மாலை 04.00 மணியளவில் புளியம்பட்டி அருகே நானும், எனது தந்தையும் சென்று கொண்டிருந்தபோது அருப்புக்கோட்டையில் உள்ள பஜாரில் உள்ள எனது தந்தை டீ குடிக்கவேண்டும் என்று கூறினார் அதனால் அவரை அருப்புக்கோட்டையில் இறக்கிவிட்டு நான் வீட்டுக்கு சென்றுவிட்டேன். பின்னர் எனது தந்தையை அழைக்க வந்தபோது கூட்டமாக யாரோ சண்டை போட்டு கொண்டிருந்தார்கள்.அருகில் நானும் எனது தந்தையும் பார்த்தபோது கூட்டத்தில் யாரோ என்னையும் எனது தந்தையையும் கீழே தள்ளிவிட்டார்கள். அதில்எனக்கும் எனது தந்தைக்கும் காயம் ஏற்பட்டது. அப்போது எங்கள் தெருவை சார்ந்த ஆஜர் எதிரி அங்கு நின்று கொண்டிருந்தார் அதனால் அவர் தான் என்னை தள்ளிவிட்டார் என்று நினைத்துக்கொண்டு அவர் மீது புகார் கொடுத்துவிட்டேன். பின்னர் விசாரித்து தெரிந்துகொண்டதில் எதிரி எங்களை அடிக்கவில்லை என்று தெரியவந்தது. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனு அதில் உள்ள கையெழுத்து

என்னுடையதுதான் **(புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ஆனால் புகாரில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை. தற்போது எதிரிக்கும் எங்களுக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை. நாங்கள் சமாதானமாக உள்ளோம். எனது தந்தை கடந்த 26.03.2026 ல் இறந்துவிட்டார். அதற்கு முன்பாகவே நாங்கள் சமாதானமாகிவிட்டோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. கடந்த 21.05.2025 ம் தேதி மாலை 04.30 மணியளவில் நானும் எனது அப்பா அன்பழகனும் புளியம்பட்டி SBI ATM அருகே வந்தபோது ஆஜர் எதிரி எங்களை வழிமறித்து அசிங்கமாக திட்டியதாகவும், அதன்பின் எனது அப்பாவை கன்னத்தில் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும், அதை தடுக்க போன என்னை ஆஜர் எதிரி அசிங்கமாக திட்டி கையால் அடித்து வலது கண் பட்டை, வலது முழங்காலிலும் சிராய்ப்பு காயம் ஏற்படுத்தியதாகவும், சண்டையை விலக்க வந்த தவசியானந்தம், நல்லதம்பி ஆகியோர்களையும் கீழே தள்ளிவிட்டு அடித்ததாகவும், பின்னர் காயம்பட்ட என்னை எனது அப்பா அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், தவசிஆனந்தமும் சிகிச்சைக்கு வந்ததாகவும், நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி அருப்புக்கோட்டை நகர் போலீசாரிடம் புகார் மனு கொடுத்து போலீசாரிடம் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 492/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **தவசிஆனந்தம்** |
| Father's Name | :: | **முத்துச்சாமி** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 08.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை புளியம்பட்டி பஜனை மடத்தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 1 வருடத்திற்கு முன்பு அருப்புக்கோட்டை பஜாருக்கு நான் சென்றபோது மாலை சுமார் 5.00 மணயிளவில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். நான் அவ்வழியாக சென்றபோது கூட்டத்தில் யாரோ என்னை தவறுதலாக இடித்து தள்ளிவிட்டார்கள். அதனால் நான் தடுமாறி கீழே விழுந்து விட்டேன். அதில் எனக்கு இடது கை விரலில் காயம் ஏற்பட்டது. என்னை யாரும் வேண்டுமென்றே அடிக்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அவருடன் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழுங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. கடந்த 21.05.2025ம் தேதி மாலை 04.30 மணியளவில் அசா.1 ஆனந்தராஜும் அவரது அப்பா அன்பழகனும் புளியம்பட்டி SBI ATM அருகே வந்தபோது ஆஜர் எதிரி அவர்களை வழிமறித்து அசிங்கமாக திட்டி அவர்கள் இருவரையும் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும், இதில் அசா.1க்கு வலது கண் பட்டை, வலது முழங்காலிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், சண்டையை விலக்க வந்த என்னையும், நல்லதம்பியும் கீழே தள்ளிவிட்டு அடித்ததாகவும், பின்னர் காயம்பட்ட அசா.1க்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், சிறிது நேரத்தில் நானும் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி அசா.1 அருப்புக்கோட்டை நகர் போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததாகவும் போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**